REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 111

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

சந்தா விகிதம்:
1 வருடம் ரூ. [illegible]
6 மாதம் ரூ. 12—8—0
3 மாதம் ரூ. [illegible]

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சென்னை: ஐப்பசி 5உ புதன் (21—10—53) ★ ★ ★ வெளியீடு: ஐப்பசி 6உ வியாழன் (22—10—53)

மலானின் 'சநாதனம்' இமயமாகிறது!

வெள்ளையர் பயிரிட்ட காய்கறிக்கே முதல் இடம்!

இந்தியர்களுக்கு எதிராக ஆப்பிரிக்கர்களுக்கு வர்த்தகச் சலுகை!

எல்லா விஷயங்களிலும் இந்தியர்கள் 'தீண்டாதவர்கள்!'

3,50,000 இந்தியர்களின் பயங்கரமான எதிர்காலம்

பம்பாய், அக். 20

"தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களுக்கும், ஆப்பிரிக்கர்களுக்கும் இடையில் பகையை மூட்ட, எல்லாவித உபாயங்களையும் மலான் கூட்டத்தினர் மேற்கொண்டு வருகிறார்கள்."

"இந்தியர்களுக்கு எதிராக, ஆப்பிரிக்கர்களுக்கு பிரத்தியேகமான வர்த்தகச் சலுகை அளிக்கப்படுகிறது."

"மலானின் ஒதுக்கல் சட்டத்தினால், 3,50,000 இந்தியர்கள் பாதிக்கப்படுவர். இவர்களுக்கு நஷ்ட ஈடு தர வேண்டுமானால், 10 கோடி பவுன் தேவைப்படுகிறது இதை எப்படி மலான் சர்க்கார் ஈடு செய்ய இருக்கிறதோ, தெரியவில்லை."

"ஒவ்வொரு வாழ்க்கைத் துறையிலும், இந்தியர்கள் விஷயத்தில் 'தீண்டாமை' அனுசரிக்கப்படுகிறது. காய்கறியில்கூட வெள்ளையர்களால் பயிரிடப்பட்டதற்கே முதலிடம் தரப்படுகிறது."

"எல்லாத் துறைகளிலும், இந்தியர்கள் மிக வேகமாக முன்னேறி வருவதே, வெள்ளையர்களின் பகை நாளுக்கு நாள் கூடி வருவதற்கான முக்கிய காரணமாகும்."

— மேற்குறித்த உண்மைகளை, இப்பொழுது இங்கு வந்துள்ள தோழர் தி. ந. சிங் என்னும் தென் ஆப்பிரிக்க டர்பன் நகர் இந்தியப் பத்திரிகையாளர், திங்கட்கிழமை பம்பாயில் ஒரு கூட்டத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

இந்தியர்கள், எவ்வளவோ கல்வித் துறையில் சொந்தத்தில் முயன்றும் கூட இன்னும் எழுத்து அறிவில்லாத பருவமடைந்த குழந்தைகள் 30,000 இருக்கும் என்றும், வெள்ளையர்கள் இவ்வளவு விஷமஞ் செய்தும்கூட ஆப்பிரிக்கர்களுக்கும் இந்தியர்களுக்கும் நல்ல நேசம் இருந்து வருகிறதென்றும் அவர் மேலும் கூறினார்,

பிரதமர்மீது குற்றச்சாட்டு

பீரட், அக். 20—

லெபனானில் சோஷலிஸ்ட் கூட்டத்தில் வெடிகுண்டு வீசும்படி தூண்டிவிட்டவர் லெபனான் பிரதமரேதான் என்று லெபனானின் பார்லிமெண்ட் மெம்பர் அப்துல் ஹஜ் குற்றம் சாட்டியிருக்கிறார். ஆனால் பிரதமர் இதை மறுக்கிறார்.

இன உணர்வா?

ஸில்சார், அக். 20—

அஸ்ஸாம் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்ய, ஆட்களை அஸ்ஸாம் மாகாணத்திலிருந்தே அமர்த்த வேண்டும் என்றும், வெளிமாகாணங்களிலிருந்து எவரையும் அமர்த்தக் கூடாது என்றும், அஸ்ஸாம் சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

மாஸ்கோவுக்கு சர்ச்சில் செல்வாரா?

லண்டன், அக். 21—

மாஸ்கோவுக்கு வின்ஸ்டன் சர்ச்சில் சென்று, மேற்கு நாடுகளுக்கும் — ரஷ்யாவுக்குமிடையே உள்ள வேற்றுமைகளைப் போக்க முயற்சிப்பார் என்ற நம்பிக்கை இங்கு ஏற்பட்டிருக்கிறது.

இதற்கு அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளும் ஒத்துக்கொண்டிருக்கின்றனவாம். ஆனால், அயல் நாட்டு மந்திரிகள் கூட்டத்தை நவ. 9ல் நடத்த ரஷ்யாவிற்கு அழைப்பு அனுப்பப்பட்டிருப்பதால், ரஷ்யா அனுப்பும் பதிலைப் பார்த்த பிறகே மாஸ்கோவுடன் நேரடியான பேச்சு வார்த்தை நடத்துவது பற்றி ஆலோசிக்கப்படுமாம்.

கராச்சி, அக். 20—

பாகிஸ்தான் பிரதம மந்திரி முகம்மதலி, மொகஞ்சதாரோ, சக்கூர் ஆகிய இடங்களுக்குச் சென்ற ஸ்பெஷல் ரயில் வண்டியை ஓட்டினார். இந்த இடங்களுக்கு மந்திரிகள், பார்லிமெண்டு மெம்பர்கள் உல்லாசப் பிரயாணமாக செல்லவே இந்த ரயில் ஏற்பாடு செய்யப்பட்டது.

"குமரிகளைத்தான் கிழவர்கள் மணந்து கொள்ள வேண்டும்"

ஆச்சாரியாரின் ஆசை

சென்னை, அக். 20—

"இளம் பெண்களையே வயதான ஆண்கள் திருமணம் செய்து கொள்ளவேண்டும்" என சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார் குறிப்பிட்டார்.

"வயதான காலத்தில், துணை புரிவதற்காகவே திருமணம் செய்து கொள்கிறோம். அதற்காகவே இளம் பெண்களை மணந்து கொள்கிறோம். வயதான பெண்களை மணக்கக் கூடாது,"

என்று சென்னை சேவாசதனத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கொரியப் போர் மீண்டும் தொடங்குமா?

அக்டோபர் 28 நெருங்குகிறதே! அரசியல் மாநாடு இன்னும் ஆரம்பிக்கவில்லையே!

டாக்டர் ரீயின் சார்பில் தாக்குதல் பேச்சு கிளம்புகிறது

முன்னால் செய்துகொண்ட இடைக்கால சமாதான ஒப்பந்தப்படி, அரசியல் மாநாடு அக்டோபர் 28-ந் தேதி தொடங்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

இன்னும் போர்க் கைதிகளை, அவரவர்கள் சொந்த நாட்டுக்கு அனுப்பும் வேலையே முடிவு பெறாமல் இருக்கிறது.

சமாதானப் பேச்சுத் தொடங்கப்படும் அக்டோபர் 28ந் தேதியில் இருந்து, மூன்று மாதங்கள் வரை, அதாவது ஜனவரி 27ந் தேதி வரை, கொரியா இணைப்புக்கான காரியத்தில் தலையிடுவதில்லை என்று டாக்டர் ரீ வாக்குறுதி அளித்துள்ளார்.

குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு மாநாடு துவக்கப்பட்டால், முன் கொடுத்த வாக்குறுதிப்படி, தான் நடந்தாக வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் கிடையாது என்றும், இப்படித்தான் ரீ நினைப்பதாக, டாக்டர் ரீயைச் சேர்ந்த சர்க்கார் வட்டார செய்தி ஒன்று எடுத்துக் காட்டுகிறது.

இந்தியா உள்ளிட்ட மற்ற நடுநிலைமை நாடுகள் அரசியல் மாநாட்டில் கலந்து கொள்வதை ரீ எதிர்ப்பதோடு, அப்படி கலந்துகொள்ள அனுமதித்தால் அம்மாநாட்டில் தென்கொரியப் பிரதிநிதிகள் கலந்துகொள்ள மாட்டார்கள் என்று தீர்மானித்திருப்பதாக நம்பப்படுகிறது.

மாநாட்டில ரஷ்யா கலந்து கொள்வதை ரீ ஆட்சேபிக்கவில்லையானாலும், ரஷ்யா ஒரு நடுநிலைமை நாடு என்று ஏற்றுக்கொள்ள மறுப்பதாக சொல்லப்படுகிறது.

ஆண்டவனிடம் இட்டுச் செல்லும் 'வெல்வெட்' பாதை!

சென்னை, அக். 21—

"கடவுளை நேராக அடைவதற்கான சிமெண்ட் பாதை, இசைதான்" என ஆச்சாரியார் அடையாறு கலா நிலயத்தில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், "இசை அறியாதது; இசைக்கு ஈடு வேறெதுவும் இல்லை. சங்கீத வித்வான்கள் கடவுளைப் புகழ்ந்து பாடினால் ஆண்டவனை எளிதில் அடையலாம்" என்றார்.

ஒரே கருத்தைக் கொடுக்கும் இருவரின் சொற் கோவை!

முன்ஷியின் கோட்பாடும், ஆச்சாரியாரின் குறிக்கோளும் அடிப்படையில் ஒன்றேதான்!

"3,000 ஆண்டுகள் தொடர்ந்து வந்திருக்கும் இந்து சமூக அடிப்படையை மாற்றக் கூடாது; மாற்றினால், விளைவது சமாளிக்க முடியாத விபரீதமாகும்.

"இந்து சட்டத் தொகுப்பு மசோதாவை அவசரப்பட்டு நிறைவேற்றக் கூடாது என்று தடை விதிப்பது ஆபத்து. ஒருவன் ஒருத்தியைத்தான் மணக்ககாம் என்றால் நம் சமூகத்தில் பல இந்துப் பெண்மணிகள் விவாகம் செய்து கொள்ள முடியாமல் போகும். விவாகம் செய்துகொள்ள முடியாமல் போகும் பெண்களுக்கு நாம் கன்னி மாடம் வைத்துக் காப்பதா?"

என்று அலகாபாத்தில் அகில இந்திய மாதர் மாநாட்டில் முன்ஷி குறிப்பிட்டார்.

ஆனால், சென்னை சேவா சதனத்தில் ஆச்சாரியார் பேசும்போது குறிப்பிட்டதாவது:—

'புதிய சமுதாயத்திற்கு அஸ்திவாரம் போடுவதற்கு முன், பழைய சமுதாய தர்ம அடிப்படைகளை நாம் தகர்த்துவிட்டோம். அதன் விளைவுகளைத்தான் மக்கள் இன்று அனுபவிக்கிறார்கள். புது சமுதாயத்திற்கு அஸ்திவாரம் போடுமுன், நல்லெண்ணமும், ஒழுக்கமும் எங்கும் பரவி நிறக வேண்டும். தயாள குணம், ஒத்துழைப்பு, பரோபகாரம் போன்ற நற்குணங்கள் வளர வேண்டும். இக்குணங்கள் மனிதர்களின் உள்ளங்களை விட்டுப் பறந்தோடிவிட்டிருக்கின்றன,"

பிரெஞ்சு சர்க்காருக்கு ஏற்பட்டுள்ள அறவழித் தோல்வி!

இந்தோ-சீனா பிரச்னையை விவாதிக்கப் போதாவு

பாரிஸ், அக் 20—

பிரான்ஸ் பார்லிமெண்டில், இந்தோ சீனா விவகாரத்தை இப்பொழுது விவாதிப்பதா கூடாதா என்ற பிரச்னை எழுந்தது. சர்க்கார் விவாதத்தை இந்த சமயத்தில் அனுமதிக்கக் கூடாது என்று வாதிட்டனர். பிரச்னை ஓட்டுக்கு விடப்பட்டது.

உடனே விவாதிக்க வேண்டும் என்பதற்குப் பெரும்பாலான வாக்குகள் கிடைத்தன. எனவே, ஜோசப் லேனியல் சர்க்காருக்கு அறவழித் தோல்வி கிடைத்திருக்கிறது.

ஐவர் சிறையில்!
இன்று
51—வது நாள்

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

சென்னை : 21—10—1953 புதன்

மூன்று மந்திரி கதை!

கனம் சக்ரவர்த்தி இராஜகோபால் ஆச்சாரியார் அவர்களின் மந்திரி சபைதான், இன்று சென்னை மாநில சர்க்காரை ஆண்டுகொண்டு இருக்கிறது. இதைக் காங்கிரஸ் மந்திரி சபை என்றோ, பொதுமக்களின் நலன்களைப் பாதுகாக்க இருக்கும் மந்திரி சபை என்றோ சொல்வதற்கில்லை. இந்த மந்திரி சபை காங்கிரஸ் மேலிடத்தின் விருப்பப்படியும், டெல்லி அதிகார மூலஸ்தேவதையின் ஆணைப்படியும், சென்னை மாநிலத்தில் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டுள்ள மந்திரி சபையாகும். சென்னை மாநில வாக்காளர்களின் விருப்பப்படி, காங்கிரஸ் மந்திரி சபை அமைவதாக இருந்திருந்தால், வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு காங்கிரஸ்காரரையே முதல் அமைச்சராகக்கொண்டு, காங்கிரஸ் மந்திரி சபை அமைக்கப்பட்டு இயங்கி வந்திருக்க வேண்டும். இந்த நியாயப்படி இப்பொழுதுள்ள மந்திரி சபை அமைப்பு இருக்கவில்லை. முதல் அமைச்சராக இருந்து, அமைச்சர் குழு அமைத்து, மாநிலத்தை நிர்வாகம் செய்ய காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களுக்கு திறமை துளியும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் நடைமுறையிலிருந்தே இந்த உண்மை விளக்கமாகிறது.

வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் கட்சியினராகிய அவர்கள், வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒருவரை, அதாவது ஆச்சாரியாரை, மேலிடத்துத் தூக்கி அமர்த்தும் தலைவனாக்கி, அமைச்சர் குழு அமைக்க இடம் கொடுக்காமல் இருந்திருக்க வேண்டும். தங்களாலும் மந்திரி சபை அமைத்து, நிர்வாகம் புரியத் தெரியும் என்பதை கன்னத்தில் அறைந்தமாதிரி காங்கிரஸ் மேலிடத்துக்குத் திட்டவட்டமாகக் கூறி, புத்தி புகட்டி இருக்கவேண்டும்.

அன்று, ஆரம்பத்தில், சட்டசபையில் இருந்த கட்சிகளின் பலாபலத்தைக் கருதி, மாற்றுக் கட்சியினரின் ஐக்கியத்தைக் குலைப்பதற்கான பஞ்ச தந்திரப் பயிற்சி பெற்றிருப்பவர்கள், தங்களில் ஒருவரும் இல்லை என்பதை எண்ணி, ஆச்சாரியாரின் தலைமையை எதிர்க்காமல் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதும் கருதிப் பார்க்கக் கூடியதுதான். பதவியின் பளபளப்பைக் காட்டியும், பதவி பெறுவதையே வாழ்க்கையின் அரிய லட்சியமாகக் கொண்டிருக்க ஐக்கிய முன்னணித் தலைவர் ஆந்திர கேசரியைக் கூட, ஐக்கிய முன்னணியில் இருந்து பிரித்து, தங்கள் கட்டத்தோடு அணைத்துக் கொள்ளுவதில் காங்கிரஸ் கட்சியினர் வெற்றி பெற்றிருக்கக் கூடும்.

பதவியைக் காட்டி, ஆசையைக் கிளறிவிட்டு, அறவழியை விட்டகலச் செய்ய, ஆச்சாரியாருக்குள்ள அளவிறந்த 'சூதும் வாதும்' கற்றவர்களால்தான் முடியும் என்பதில்லை ஆச்சாரியாருக்குத் தூது செல்வதற்காகவேன்றே, திருமங்கலம் வாக்காளர்களால் தேர்ந்தெடுத்து சட்டசபைக்கு அனுப்பிய திருமங்கலம் திவான் ஒன்றே போதும், மற்றக் கட்சியில் இருந்து காங்கிரஸ் கட்சிக்கு ஆட்களைக் கொண்டுவந்து சேர்க்க!

இந்தப் பிளவுப் பணிக்கு அபார திறமை ஒன்றும் வேண்டியதில்லை. சாமர்த்தியம், சாதுர்யம், சொற்றிறமை எதுவும் இந்த அதர்மத்துக்கு அவசியமில்லை. 'இன்ன பதவி, இவ்வளவு மாத வருமானம், இத்தகைய அதிகாரம்' என்று பட்டியலை நீட்டிவிட்டாலே போதுமானது, மக்களாட்சி உடைப்புப் பணிக்கு! இத்தகு பணியை, ஆச்சாரியார்தான் சரியாகச் செய்வார் என்பதில்லை; காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களில் பெரும்பாலோருக்கு இந்தப் பயிற்சி நிரம்ப உண்டு. நிற்க,

அன்று, ஆற்றல் இல்லாமலோ, முன் யோசனை இல்லாமலோ, அமைச்சர் குழு அமைக்க ஆச்சாரியாருக்கு, காங்கிரஸ் கட்சியினர் இடமளித்துவிட்டார்கள். ஆனால், இனியும் அந்தத் தவறையே தொடர்ந்து செய்துகொண்டு இருக்க காங்கிரஸ் கட்சியினருக்கு எவ்வித அவசியமும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆந்திர மாநில அமைப்புக்குப் பிறகு, சென்னை சட்டசபையில் உள்ள எதிர்க் கட்சியினர் பலம் மிகமிகக் குறைந்து போய் இருக்கிறது என்பது உண்மை. ஆச்சாரியார் போன்ற அசகாயசூரர்கள்தான் முதல் அமைச்சராக இருந்து நாடாள வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இப்பொழுது இல்லை. திருமங்கலம் திவான்டியோ, பாகனேரி பக்குவசாமியோ காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களில் எவர் வேண்டுமானாலும் ஆச்சாரியாரை அகற்றிவிட்டு, மந்திரி சபையை அமைப்பது சாத்தியமாகக்கூடியதே. இதுமட்டுமல்ல. ஆச்சாரியார் அணைத்துக்கொண்ட இரு சந்தர்ப்பவாதிகளை அகற்றிவிட்டுக் கூட, ஆட்டங்கொடுக்காத ஒரு மந்திரி சபையை அமைக்க, காங்கிரஸ் கட்சிக்கு எண்ணிக்கை பலம் இருக்கிறது.

ஆச்சாரியாரை ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டு, அதற்குப் பதில் வேறு ஒருவரைக்கொண்டு மந்திரி சபையை உருவாக்க வேண்டுமென்று, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் காமராஜரும், அவரைச் சேர்ந்த காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களும் முயற்சி எடுத்துக்கொண்டதும், அதை ஆச்சாரியார் மிக தந்திரமாக முறியடித்திருப்பதும் பகிரங்க ரகசியம்.

ஆச்சாரியாருக்குக் கிடைத்திருப்பது தற்காலிக வெற்றியேயல்லாது, நிரந்தர வெற்றியல்ல என்பது நிச்சயத்திலும் நிச்சயம். ஏற்பட்டுள்ள உட்பூசல், சூழ்நிலையின் காரணமாக, இப்பொழுதைக்குத் தள்ளிவைக்கப்பட்டு இருக்கிறது; இது, எந்த நிமிஷத்தில் வேண்டுமானாலும் தலைதூக்கும் என்பது மூக்காலும் உறுதி. மற்ற மாநிலங்களில் அமைச்சர் குழுவிற்கும், காங்கிரஸ் கட்சிக்கும் நடைபெற்றுவரும் ரசாபாசங்கள், சில நாளைக்குத் தலைதூக்கி ஆடுவதும், இரண்டொரு நாள் தணிந்து கிடப்பதும், மீண்டும் முன்னிலும் வலிவாகக் கிளம்புவதும், இந்த உண்மையை வலியுறுத்துகின்றன.

காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களுக்குள் மூண்டுகிடக்கும் மனமாச்சரியத்தை எதிர்த்து நிற்பதில், ஆச்சாரியார் நிலைமையை ஒருவாறு சமாளித்து உள்ளார். காங்கிரஸ் மேலிடத்தின் ஆதரவு பலம்தான், இந்த முறையும், ஆச்சாரியாருக்கு அரணாக அமைந்து இருக்கிறது.

இந்தச் சமாளிப்புப் போராட்டத்தின் எதிர்ப்புக்கான ஒரு சாதனமாகத்தான், தனது மந்திரி சபையின் எண்ணிக்கையை நீட்டி இருக்கிறார். ஏற்கனவே, தனக்குக் கட்டியங் கூறிக்கிடந்தவர்களாகப் பார்த்து, திருமங்கலத்தையும், மீஞ்சூரையும் தமது மந்திரி சபையில் சேர்த்துக்கொண்டு இருக்கிறார். முன்பு அவர்கள் ஊதியம் என்று வெளிப்படையாகப் பெறாமல், ஆச்சாரியாருக்குப் பராக்குக் கூறி வந்ததை, இனி மாதா மாதம் மக்கள் வரிப் பணத்தில் இருந்து ஊதியமாகப் பெற்று, செய்துவருவர். கோயில் மாடுகளுக்கு அடையாளம் தெரிவதற்காக, முத்திரை சூடு போடுவதுபோல, தனது சொந்த ஆட்கள் என்று நாட்டு மக்கள் உணர்ந்துகொள்வதற்காக, இரு கனவான்களுக்கு மந்திரி முத்திரை சூடு போட்டிருக்கிறார். ஆச்சாரியார் மந்திரி சபையில், மந்திரிகளாக உள்ளவர்களுக்குள்ள அதிகார அந்தஸ்து, மந்திரி என்ற பெயரளவோடு நின்றுவிடுவதுதான், என்பது வெளிப்படை!

கனம் பக்தவத்சலனாருக்குள்ள ஒரே ஒரு திறமை, அதுவும், மற்றவர்களுக்கில்லாத—இருக்க முடியாத ஆற்றல், 'சேபாமடந்தை' பண்ணுவதுதான்!

அந்த மேதையே, சென்ற பொதுத் தேர்தலில் பொதுமக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டவர். இதற்குமுன் அவர் மராமத்து மந்திரியாக இருந்து நடந்துகொண்ட நடைமுறையை, வாக்காளர் பெருமக்கள் ஒப்புக்கொள்ளவில்லை, கண்டிக்கிறார்கள், வெறுக்கிறார்கள் என்பதற்கு அறிகுறியாகத்தான். அவருக்கு வாக்களிக்காமல் இருந்திருக்கிறார்கள். இனி அவர், தங்களுக்குப் பிரதிநிதியாக இருப்பதை மனப்பூர்வமாக தாங்கள் விரும்பவில்லை என்பதைத்தான், தங்கள் செயல் மூலம் வாக்காளர்கள் விளக்கமாக அறிவித்திருக்கிறார்கள்.

மக்களாட்சி முறைக்கு மதிப்பளிக்க வேண்டும், மானங் காப்பதிலே அக்கறை காட்ட வேண்டும் என்ற நல்லெண்ணம் மீஞ்சூராருக்கு இருந்திருக்க வேண்டும். அந்தச் சிறிய விஷயங்களை இந்தப் பெரிய மனிதரிடம் எதிர்பார்ப்பவர்கள் அல்லவா உலக அறிவு பெறாதவர்கள்! பதவி தரும் பட்டாள வாழ்வை முழுக்க முழுக்க உருசி பார்த்துப் பழகியுள்ளவர் ஆயிற்றே, இந்த மீஞ்சூரார்! நிற்க,

மூன்றாவது மந்திரியார் தோழியர் ஜோதி அம்மையார் 'பழங்குடி மக்கள்' என்று சொல்லப்படும் பெண் குலத் தோன்றல். ஒரு பெண்ணை மந்திரி சபையில் காணும் பேறு பெற்றது மகிழ்ச்சிக்குரியது என்றே வைத்துக்கொண்டாலும், வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படாது, வீட்டிலே முடங்கிக்கிடந்த ஒரு அம்மையாரை மந்திரியாக்குவது எந்த முறையான நியாயமாகும் என்பது ஆராயத்தக்கது. அந்த அம்மையாருக்கும், சென்னை மாநில அரசியல் நடைமுறைக்கும் இதுவரையில் எந்தவிதத் தொடர்பும் இருந்தது கிடையாது. அந்த அம்மையாரின் அரசியல் ஆற்றல், அறிவுபற்றி அவருடைய கணவனாருக்கு மட்டுமே தெரியுமேயல்லாது, பொதுவாக நாட்டு மக்களுக்கும், குறிப்பாகப் 'பழங்குடி' மக்களுக்கும் எதுவுமே தெரியாது. பெண் குலத்தின் தேவைகளும் தெரியாது, பழங்குடி மக்களின் குறைபாடுகளும் புரியாது அந்த அம்மையாருக்கு. அவரை இழுத்து வந்து அரியாசனத்தில் அமர்த்தி இருக்கிறார் அன்பர் ஆச்சாரியார். அற்புதப் புதுமை!

ஜோதி அம்மையார் கிணற்றுத் தவளையா, குளத்துத் தவளையா என்ற ஆராய்ச்சி ஒரு பக்கம் இருக்க, அந்த அம்மையார் முறையாகப் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபையில் இடம் பெற்றிருப்பவர் அல்ல அரசியல் சட்ட ஏற்பாட்டின்படி, இன்னும் ஆறு திங்களுக்குள் தேர்தலில் நின்று, பொதுமக்கள் ஆதரவைப் பெறுவார்கள் என்ற நம்பிக்கை அளிக்கும் பேச்சும் இதுவரையில் கிளம்பவில்லை. இந்த அம்மையார் விஷயத்திலும் 'ஆச்சாரியார் முறை'தான் பின்பற்றப்படும் என்றே அனைவரும் கொள்ளலாம்.

ஆச்சாரியார் அரசியல் அறநெறிக்கு, சிறந்ததோர் நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டியதுதான் மிச்சம்.

ஜோதி அம்மையாரை, அமைச்சர் ஆக்கினதின் மூலம், சட்டசபையில் இப்பொழுது உள்ள காங்கிரஸ் பழங்குடி மக்களின் பிரதிநிதிகளை, வெளிப்படையாகக் கூறாமல, ஆச்சாரியார் அவமானப்படுத்துகிறார் என்பது கூறாமலே விளங்கும்.

வேணுமென்றே 'பழங்குடி' மக்களுக்கு ஆச்சாரியார் செய்துள்ள இந்த அவமரியாதைக்கு, 'பழங்குடி' மக்களின் பிரதிநிதிகள் என்ன பதில் சொல்லப் போகிறார்களோ நமக்குத் தெரியாது.

ஆச்சாரியாரின் அவலட்சணப் போக்கிற்கு, தக்க பதில் கூறாமல், 'பழங்குடி' மக்களை அலட்சியப்படுத்தி, அவர்களுடைய பிரதிநிதிகள் நடந்து கொள்வார்களானல், அந்தச் சலனமற்ற போக்கை, 'பழங்குடி' மக்கள் ஏற்றுக் கொள்வார்களென்று நாம் நினைக்கவில்லை எழுச்சிக் குரல் கிளம்பாமல் இருக்காது என்ற திடநம்பிக்கை நமக்கு உண்டு.

ஆச்சாரியாரின் 'மூன்று மந்திரி' கதை இதுதான்!

ரெவின்யூ போர்டுகள் ஒழிக்கப்படும்

கலெக்டர்களை மேற்பார்வையிட பிரதேச கமிஷனர்கள்

சென்னை, அக். 21—

சென்னை சர்க்கார் நிர்வாகத்திலுள்ள ரெவின்யூ போர்டை ஒழித்துவிடுவது பற்றி அரசியலார் யோசித்து வருகின்றனர். பல்வேறு மாவட்டங்களின் நிர்வாகத்தை ஒருமுகப்படுத்துவது இந்த ரெவின்யூ போர்ட்டின் பணி.

மேற்படி நிர்வாகம், தற்போது, ஐ. ஏ. எஸ். அதிகாரிகளின் வசமுள்ளது. இவர்கள், அனுபவமும் திறமையும் அற்றவர்களென ஆச்சாரியார் கருதுகிறார். எனவே, இவர்களுக்கு மேலாக பிரதேச கமிஷனர்கள் என்ற பெயரில் அதிகாரிகளை நியமிக்க முதலமைச்சர் எண்ணியுள்ளார்

மூன்று, நான்கு மாவட்டங்களுக்கு ஒருவர் வீதம் நியமிக்கப்படுவர். கலெக்டர்களின் வேலைகளை அவர்கள் மேற்பார்வையிடுவர் இதன் முடிவும் விபரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

டிராம் கம்பெனி வரி பாக்கி

கம்பெனி—நகர சபை லடாய்!

சென்னை, அக். 20—

டிராம் கம்பெனி ரிசீவர் புருக்ஸ் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றை நேற்று பகலில் உயர்நீதி மன்ற நீதிபதி சந்திர ரெட்டி ஏற்றுக் கொண்டார்.

1953—54ம் ஆண்டின் முதல் 6 மாதத்திற்கு, கம்பெனி தர வேண்டிய வாகன வரியை வசூலிப்பதற்காக கம்பெனியின் ஜங்கம சொத்துக்களை சென்னை நகர சபை வில்லங்கப்படுத்துவதைத் தடுக்குமாறு, மனு கோரியது

நீதிபதி இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துவிட்டு, இம்மாதம் 30-ம் தேதிக்குள் நகர சபைக்கு நோட்டீஸ் சார்பு செய்ய கட்டளையிட்டார்.

நகர சபை ரூ. 33945—6—0 வரி கோரியுள்ளது

பக்தர் பிள்ளையாரை உடைத்தார்!

சேலம், அக். 20—

திருச்செங்கோடு தாலுகாவை சேர்ந்த சாணார் பாளையத்தில் வசிக்கும் கந்தசாமி என்பவர், தன் இரு குழந்தைகள் காலராவில் மாண்டதற்குக் காரணம் கடவுள்தானென்று எண்ணி, அந்தக் கிராமத்தில் உள்ள பிள்ளையார் சிலையையும் மாரியம்மன் சிலையையும் உடைத்தார்.

கிராமத்துப் பெரிய மனிதர்கள் இதுபற்றி விசாரித்து வருகின்றனர்.

பாட்னா, அக். 21—

நாடு சுதந்திரமடையும் போது, பீகாரில், 20,000 தபால் நிலையங்கள் இருந்தன; இப்போது, 43,000த்திற்கு அதிகரித்துள்ளது. பீகாரில், தபால்-தந்தி இலாகாவில் மட்டும், 2,00,000 பேர் வேலை செய்கின்றனர்.

செய்திச் சுருள்

★

மதுரையில் பொதுக் கூட்டம்

மதுரை, அக். 20—

18—10—53 மாலை மதுரை கீழ மார்க்கெட் திடலில், நகர தி. மு. கழகத்தின் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் என். முத்து தலைமை வகித்தார். தலைவர் முன்னுரையாக, கடந்த சில வாரங்களாக மதுரையில் நடைபெற்றுவந்த அரசியல் தகராறுகள் பற்றி சிறிது விளக்கிவிட்டு, இதைப் பயன்படுத்திக்கொண்டு தி. மு. கழகத்தின்மீது மக்களுக்கு தப்பெண்ணத்தை உண்டாக்க முயற்சிக்கும் கம்யூனிஸ்டு கட்சியின் போக்கை கண்டித்தார்.

பின்னர், தோழர்கள் கே. என். ராஜமான், எம் அய்யாசாமி ஆகியோர் நேருவின் வருகை பற்றியும், கருப்புக் கொடி காட்டியதின் நோக்கம் பற்றியும், அதன் விளைவு பற்றியும், அதனால் தி. மு. கழகம் அடைந்துள்ள வெற்றி பற்றியும், ஆச்சாரியாரின் தி. மு. கழக எதிர்ப்புப் பிரச்சாரம் பற்றியும், அது காங்கிரஸ் கட்சியின் பலவீனத்தின் முதிர்ச்சி என்பதை விளக்கியும் பேசினார்கள்.

பட்டாபிராம் தி. மு. கழக கிளை துவக்கம்

பட்டாபிராம், அக். 20—

நேற்று மாலை, இவ்வூர், தி. மு. கழகக் கிளை துவக்க விழா நடைபெற்றது. கூட்டம் துவங்குவதற்கு முன்னர், ஓர் மாபெரும் ஊர்வலம், தண்டுரை வள்ளுவர் படிப்பகத்திலிருந்து தோழர் வி. என். கோவிந்தராசன் தலைமையில் புறப்பட்டு, பல தெருக்களின் வழியாக வந்து, கூட்டத் திடலை மாலை 7 மணிக்கு வந்தடைந்தது. இயக்கப் பண் நாகர்கோவில் தோழர் இராஜரத்தினம் பாடியபின் கூட்டத்திற்கு தோழர் ஏ. கங்காதரன் தலைமை வகித்தார்.

தோழர்கள் கோ. இலறமுடிமணி, வி எஸ். கோவிந்தராசன் முகலை ஆர் என். பாண்டியன், தோழியர் அலமேலு அப்பாதுரை ஆகியோர் தி மு கழகத்தின் கொள்கைகளை விளக்கிப் பேசினார்.

கிரம்பூர் தி. மு. கழகத் துவக்கம்

கிரம்பூர், அக். 20—

22—9—53-ல், தி மு கழகத் துவக்க விழா நடைபெற்றது. அதுபோது, தோழர்கள்: கே. பி. பெருமாள் செயலாளராகவும், தி. கிருஷ்ணசாமி அணைச் செயலாளராகவும், ஆர். சிவசாம்பசிவம் பொருளாளராகவும், பி. ராமானுசம் மாவட்டப் பிரதிநிதியாகவும், செயற்குழு உறுப்பினர்களாக சே. என். துரைசாமி, ஏ. கோபால், பி கன்னையன், சா. ராமசாமி, மு வெங்கிடாசலம், பி ரங்கசாமி, என். வள்ளிமுத்து ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திரு. வி. க. மன்றம்

பொள்ளாச்சி, அக். 19—

திரு வி. க. மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கக் கூடிய கூட்டத்தில், அவரது நினைவாக "திரு. வி. க. மன்றம்" என ஒரு அமைப்பு ஏற்படுத்தி, பணியாற்ற முடிவு செய்யப்பட்டது. மன்றத்திற்கு தோழர்கள் கே. என். திருமூர்த்தி தலைவராகவும், எம். சதாசிவம் செயலாளராகவும், ஆர். வி. முருகநாதன் பொருளாளராகவும், அ. சுபாலு, கே. என். கிருஷ்ணசாமி உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மன்ற நிதிக்காக வருகிற 15—11—53 ஞாயிறன்று உதவி நாடகம் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

'ஜன்மக் கோளாறு!'

★

"'கபடமும் சூதும் அற்றவர்; எதையும் வெளிப்படையாகப் பேசுகிறவர்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவர்' என்ற நம்பிக்கை மக்களுக்குத் தலைவர்களிடம் ஏற்பட வேண்டும். இந்த நம்பிக்கை வளர்ந்தால்தான், பொதுக் காரியங்கள் லகுவாக நடக்க முடியும். இது இல்லாமல் எதற்கு எடுத்தாலும் சந்தேகமே நிலவிக் கொண்டிருந்தால், தலைமைப் பதவியில் உள்ளவர்களால் துளிக்கூட எதையும் சாதிக்க முடியாது; நாடும் முன்னேற முடியாது. ஏனெனில், தலைவர் காட்டும் வழியில், மக்கள் ஏகோபித்து ஊக்கமுடன் வேலை செய்தால் தான் எந்தக் காரியமும் சீக்கிரமாகவும் முழு வெற்றியுடனும் நடக்க முடியும். 'அது என்னவோ தெரியவில்லை; ராஜாஜி எதைச் சொன்னாலும் மக்கள் அதை அப்படியே நம்புவதில்லை. சிலர், அதற்கு நேர்மாறான கருத்துதான் அதன் அர்த்தமென்று முடிவு கட்டிவிடுவார்கள். வேறு சிலர், அதில் எவ்வளவு உண்மையிருக்க முடியும் என்று சதவிகிதம் பார்த்து, தீவிர விவாதத்தில் இறங்குவார்கள். இப்படியாக, அவர் பேசிய வார்த்தைகளுக்குள்ள பொருளைத் தவிர மற்றெல்லாவிதமான பொருள்களும், அதற்குக் கற்பிக்கப்படும். ராஜாஜியைப் பற்றிய இந்த எண்ணம் இன்றைக்கு நேற்று ஏற்பட்டதல்ல. இது அவர் அரசியலில் பிரவேசித்த காலம் முதல் இருந்து வருகிறது. காலஞ்சென்ற எஸ். சீனிவாச அய்யங்கார், எஸ். சத்தியமூர்த்தி போன்றவர்கள் ராஜாஜியின் இந்த மர்மமான பேச்சுகள், போக்குகள் ஆகியவற்றைக் கண்டு ரொம்பவும் அவதிப்பட்டிருக்கிறார்கள் ஆகையால், இது ராஜாஜியின் ஜன்மக் கோளாறு."

—'ஜனயுகம்' 20—10—'53

கல்லக்குடி போராட்ட செயற் குழு கூட்டம்

திருச்சி, அக். 21—

கல்லக்குடி போராட்ட செயற் குழுவின் அவசரக் கூட்டம், 26—10—53 திங்கட்கிழமை மாலை 5-30 மணிக்கு, திருச்சி சின்னக்கடைத் தெருவிலிருக்கும் தி மு. கழகக் கட்டிடத்தில் நடைபெறும் செயற்குழு உறுப்பினர்கள் இதனையே அழைப்பாகக் கொண்டு வருமாறு திருச்சி மாவட்ட செயலாளர் தோழர் ஏ. பி. தர்மலிங்கம் கேட்டுக்கொள்ளுகிறார்.

★

லால்பேட்டை தி. மு. கழக செயற் குழு தோழர்கட்கு

22-10-53 மாலை 4-மணிக்கு லால்பேட்டை புதுக்கடைத் தெருவிலுள்ள அழகிரி நூல்நிலையத்தில், தி. மு. கழக செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அனைவரும் தவறாது வருகை தருமாறு செயலாளர் லா. ந. இராமலிங்கம், கேட்டுக் கொள்கிறார்.

★

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக செயற் குழு தோழர்கட்கு

25—10—53-ல், செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர் கூட்டம், ஓரகடம் என்ற ஊரில் கூடி, பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டி இருப்பதால், உறுப்பினர்கள் அனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டு வருகை தந்தருள வேண்டுகிறேன் என, செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை கேட்டுக் கொள்கிறார்.

• • •

[சென்னையிலிருந்து, குன்றத்தூர் வழியாகவும், படப்பை வழியாகவும், காஞ்சீபுரம் செல்லும் பஸ்ஸில் வந்தால், ஓரகடம் என்ற ஊரை அடையலாம்.]

லண்டன், அக் 20—

டிரீஸ்டியிலிருந்து தங்கள் படைகளை பிரிட்டனும், அமெரிக்காவும் வாபஸ் பெறும் பட்சத்தில், இதாலி மந்திரிசபை ராஜிநாமா செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

9-வது ஆண்டு விழா

திருச்சி, மார்சக் பேட்டை ரோடு, அம்பேத்கார் சங்கத்தின் 9-வது ஆண்டு விழா, 24—10—53ல் சனிக்கிழமை மாலை 6-மணிக்கு, தோழர் டி. எஸ். பகவதி அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது, தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

★

திருமணங்கள்

தி. மு. கழக முக்கியஸ்தரான திருவண்ணாமலை தோழர் ப. உ. சண்முகம் அவர்களின் தம்பி தோழர் ப. உ. கண்ணனுக்கும், சேலம் தோழர் எஸ். கோவிந்தசாமி அவர்களின் மகள் தோழியர் ராதாபாயிக்கும் 26-10-53 திங்களன்று காலை 9-மணிக்கு மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும். மணமக்களை வாழ்த்தி, தோழர்கள் க. அன்பழகன், ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., ஆகியோர் பேசுவர். அன்று மாலை கலைவாணர் என். எஸ். கே. குழுவினரின் 'வில்லுப் பாட்டு' நடைபெறும்.

* * *

வண்ணை பெருநிலக் கிழார் அ. குட்டியப்ப நாடார் அவர்கள் மகன் தோழர் கு. நாகராசனுக்கும், தோழர் சி. ப. பொன்னுசாமி அவர்கள் மகள் தோழியார் செகசோதிமணிக்கும் 25-10-53 ஞாயிறன்று காலை 9-மணிக்கு, வண்ணை, லாயர் சின்னத்தம்பி தெருவில் திருமணம் நடைபெறும். மணமக்களைப் பாராட்டி பலர் பேசுவர்.

பிறப்பு

சேலம் அரிசிப்பாளையம் தோழர் பி. கே. சித்தையன் அணைவியார் சாரதா அவர்கள், 18—10—53-ல் ஓர் ஆண் மகவைத் தந்தார். அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது இந்த ரூ. 1 ஏற்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

எண்ணிக்கை!

நைரோபி, அக். 20—

கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்கள், சென்ற ஆண்டு 7,91,476 பவுன்களை தங்கள் தாய் நாட்டுக்கு மணியார்டர் மூலம் அனுப்பியுள்ளனர். பாகிஸ்தானுக்கு 47,403 பவுன்கள் அனுப்பப்பட்டன.

கழகக் கூட்டங்கள்

★

மல்லியக்கரை பெரியார் நகர்

22—10—53 வியாழன் மாலை

தலைவர்: என். சீரங்ககண்டர்

பேசுவோர்:

எம். பி. சுப்ரமணியம்

சிற்றளி சுப்ரமணியம்

★

நாகூர்

24—10—53 சனி மாலை

தலைவர்:

இசை முரசு ஈ. எம் அனீபா

பேசுவோர்:

என். எஸ். இளங்கோ

குடந்தை எஸ். கே. சாமி

இசை: ஈ. எம். அனீபா

★

கடையநல்லூர்

25—10—53 ஞாயிறு மாலை

பேசுபவர்:

சி. பி. சிற்றரசு

★

கொல்லைக்கோம்பை

25—10—53 ஞாயிறு மாலை

தலைவர்: கலையரசன்

பேசுவோர்:

எம். எஸ். ராமசாமி

சி. இல. சுந்தரேசுவரன்

கு. இராமக்குட்டி

க. அரங்கசாமி

★

திண்டுக்கல்

25—10—53 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு

இடம்: வ. உ. சி. திடல்

தலைவர்: என். முத்து

பேசுவோர்:

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

கே. செழியன்

பி. சமதர்மம், எம். சி.

நச்சு நாக்கு!

★

"சமீபத்தில் புதிதாக, மூன்று மந்திரிகள் நியமிக்கப்பட்டார்களல்லவா? இவர்கள் நியமிக்கப்பட்ட செய்தி வெளியாவதற்கு இரண்டு தினங்களுக்குமுன், ராஜாஜி என்ன சொன்னார்? "புது மந்திரிகளை நியமிக்க வேண்டியது அவசியந்தானா, ஆந்திரா பிரிந்துவிட்ட பிறகு, இருக்கிற மந்திரிகளை வைத்துக்கொண்டு காரியங்களை நடத்த முடியாதா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

'இதெல்லாம் ஒரு பெரிய விஷயமல்ல. அரசியலில் இது சகஜம் சில சமயங்களில் யாராயிருந்தாலும் இப்படித்தான் பேச வேண்டியிருக்கும். ஆனால், ராஜாஜி விஷயத்தில் அப்படியில்லை இந்தமாதிரி சந்தர்ப்பங்கள், அவருக்கு, வெல்லம் மாதிரி. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களைத் தவிர, சாதாரண விஷயங்களாயிருந்தால்கூட அதில் ஒரு மூடு மந்திரம், ஒரு பொடி, கொஞ்சம் விஷமம், எதிரி மனதைப் புண்படுத்துகிற மாதிரி ஒரு கையாண்டி இவ்வளவும் கலந்த வார்த்தைகள்தான் ராஜாஜியின் உதடுகளிலிருந்து உதிரும்."

—'ஜனயுகம்' 20—10—'53

★★★★★★★★★★★★

2-வது இதழ் விற்பனையாகிறது!

'தனி நாடு'

[வார இதழ்]

ஆசிரியர்: வெற்றி வீரன்

★

தனிப் பிரதி: ஒரு அணா

ஆண்டு சந்தா: ரூ. 3-8-0

பிரதி ஒன்றுக்கு 4 அணா வீதம் முன் பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் எங்கும் தேவை

விவரங்களுக்கு:

'தனி நாடு' அலுவலகம், சென்னை—5.

★★★★★★★★★★★★

நான்கு யுகங்கள்!

மெக்ஸிகோ, அக். 20—

உலகத்தில் நான்கு யுகங்கள் ஏற்பட்டதாக பூர்வீகக்குடி மக்கள் நம்புகின்றனர்.

நான்கு யுகத் தத்துவப்படி, முதல் யுகத்தில், உலகத்தில் பூதங்களும், காட்டு மிருகங்களும் வசித்து வந்தன; காட்டு மிருகங்கள் உலகத்தை அழித்து விட்டன.

இரண்டாவது யுகத்தில், மனிதர்கள், குரங்குகளாக மாறிவிட்டனர். கடுமையான புயல் காற்றுகள் உலகத்தை நிர்மூலமாக்கி விட்டன.

மூன்றாவது யுகத்தில், உலகத்தை நெருப்பு அழித்துவிட்டது. இந்த அவலம் நிகழ்வதற்கு முன்பே மனிதர்கள் பறவைகளாகி விட்டனராம். அடுத்த படைப்பில் வெள்ள சேதம் ஏற்பட்டு மனிதர்கள் மீன்களாக மாறினராம்.

நான்காவது யுகத்தில், மனித இனம் மீண்டும் தோன்றும்படிச் செய்து, இயற்கை, அவர்களைப் பாதுகாத்து வந்ததாம்!

இப்போது, ஐந்தாவது யுகமாம்! மனித இனம், மீண்டும், தோற்றுவிக்கப்பட்டதாம்!

உழைப்பின் அளவுகோல்!

"ஜப்பானிலுள்ள மில்களில், ஏராளமான பெண்கள் வேலை செய்கின்றனர்; ஒரே சமயத்தில், 100 தறிகளைக் கவனிக்கும் ஆற்றல் ஒரு ஜப்பானிய சிறுமி பெற்றிருக்கிறாள்; ஆனால், பாகிஸ்தானில், ஒரு மனிதன, ஒரே சமயத்தில், மிக உயர்ந்த பட்சமாக 10 தறிகளைத்தான் கவனிக்க முடியும்," என்று, பாக். மந்திரி ஒருவர் கூறியுள்ளார்.

பம்பாய் தி. மு. கழக முதல் மாநாடு

பிரதிநிதி தேர்வு கூட்டம்

17—10—53-ல், பம்பாய், கோலிவாடா தி. மு. கழகக் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெற்றது. அதுசமயம், பம்பாய் தி. மு. கழக முதல் மாநாட்டிற்குப் பிரதிநிதிகளாக தோழர்கள் எஸ். கணேசன், பி. செண்பகப்பாண்டியன், எல். எம். பாண்டியனும், தொண்டர் படைக்குத் தோழர்கள் என். முத்து தலைவராகவும், எ. இ. கே. யாக்கூப் துணைத் தலைவராகவும், ஏ. தேவராஜ், எம. கோவிந், ஏ. அப்பப்பன், வி. ராமு, டி. குப்பான், ஏ. மோசேஸ், எம். வி. ராஜு, என். பழனி, ஏ. இ. கே. லத்தீப் ஆகியோர் தொண்டர் படையினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் கல்லக்குடி சதிவழக்கு நிதிக்கு உண்டியல் மூலம் பிரிந்த ரூ 15-2-0-ஐ சென்னை நிதிக் குழுவிற்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

ஆரிய கலாசாரம் அநாகரீகமானது!

— (:) —

அதற்கு இனி இடமில்லையென ஆருடம்

'பாரத தேவி'யின் கண்டிப்பு

சென்னை, அக். 21—
அகில இந்திய மாதர் மாநாட்டில், 'சமூகப் புரட்சியால் ஆபத்துக்கள் நேரிடும்,' என்று, கவர்னர் முன்ஷி பேசியதைக் கண்டிக்கும் வகையில், 'பாரத தேவி' தின இதழ், இன்றைய தலையங்கத்தில், குறிப்பிட்டிருப்பதாவது :—

"முன்ஷியின் பிற்போக்கு வாதம் சரியென்றால், அதாவது, ஒருவன், ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணக்கலாமென்றால், இதன் எதிரிடையான அம்சமும், நியாயம் என்றே கருதப்படும். அதாவது, ஒரு பெண், ஒன்றுக்கு மேற்பட்ட கணவன்மார்களை அடையலாம் என்ற வாதமும் சரியென்றே வாதிக்க சிலருக்கு இடமேற்படும். பலதார மணமும், பல கணவன் மணமும், உலக நாகரீக நாடுகள் எங்கும் குழிதோண்டி புதைக்கப்பட்டு விட்டன. நவ இந்தியாவில், இவை இரண்டிற்கும் இடமளிப்பது அநாகரீகத்தை வரவேற்று சமூகத்தை அவமதிப்பதாகும்!" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

டிரீஸ்டியின் மற்றோர் தலைவலி

இரண்டரை லட்சம் மக்களுக்கு நேரிடப் போகும் அவதி

ரோம், அக் 21—
டிரீஸ்டியில் ஒரு பகுதியிலுள்ள பிரிட்டிஷாரும், அமெரிக்கரும் வெளியேறினால், அங்கு வசிக்கும் 2½ லட்சம் மக்களுக்கு வருமானம் குறைந்து போகுமே என்று பிரதேச மக்கள் வருத்தப்படுகின்றனர்.

இந்த தேசத்தவர்களும், ஆண்டொன்றுக்கு 50 லட்சம் பவுன் இப் பகுதிக்காகச் செலவிடுகின்றனராம். பல டிரீஸ்டி மக்களுக்கு உயர்தர உத்தியோகங்களிலிருந்து, வீட்டு வேலைக்காரர்கள் வரை வேலை கிடைத்து வந்தன. உதாரணமாக, நேச நாடுகள், 6,000 போலீஸ்காரர்களை நியமித்திருக்கின்றன.

ஆகவே பிரிட்டிஷ், அமெரிக்கர் வெளியேறியதும் பலருக்கு வேலையில்லாமல் போய்விடும் பயப்படுகிறது.

பஞ்சாபின் 'துன்ப நதி!'

லாகூர், அக். 20—
பஞ்சாபின் 'துன்ப நதி' எனப்படும் சட்லஜ், மிகவும் செழிப்பான கரையோர நிலத்தை 5,000 அடிக்கு அரித்துக்கொண்டு போய்விட்டதாக இங்கு நம்பகமாகத் தெரிகிறது. நில அரிப்பைத் தடுக்க பாக். சர்க்கார் மராமத்து இலாகா ஒரு திட்டம் தயாரித்திருக்கிறதாம்.

அய்யர், அய்யங்கார், சாஸ்திரி படத்திறப்பு விழா!

சென்னை, அக். 21—
விவேகானந்தா கல்லூரி நிர்வாகக் கமிட்டியில் உறுப்பினர்களாக இருந்த என். கோபாலசாமி அய்யங்கார், டி. ஆர். வெங்கடராம சாஸ்திரி, அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் ஆகியோரின் உருவப் படங்களை நேற்று முன்தினம் சி. பி. ராமசாமி அய்யர், கல்லூரிக் கட்டிடத்தில் திறந்து வைத்தார்.

விழாவிற்கு டி. என் சர்மா தலைமை வகித்தார். விழா முடிவில் சி. இராமானுஜாச்சாரி வந்தனம் கூறினார்.

"கையில் காலணா இல்லை!'

நியூயார்க், அக். 20—
கோடீஸ்வரனான அலிகானின் முன்னாள் மனைவியான பிரபல ஹாலிவுட் நடிகை ரீடா ஹேவொர்த், தன் கைவசம் ஒரு பென்னிகூட இல்லை என்று கூறினார். ஹாலிவுட்டை விட்டுப் புறப்பட்டபோது தன்னிடம் 2000 டாலர்கள் இருந்ததென்றும், ஆனால், அவ்வளவும் செலவாகி விட்டதென்றும், 'என் கணவன் வருமானத்தைத்தான் இனி நம்பியிருக்க வேண்டும்,'என்றும் ரீடா கூறினார்.

ஜனத்தொகை பெருக்கம்

கராச்சி, அக். 20—
கராச்சியில் ஒவ்வொரு வாரமும் 900 குழந்தைகள் பிறக்கின்றன; இவற்றில், 600 பிழைக்கின்றன என்று கராச்சி முனிசிபாலிடி வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது.

எட்டரை ஆண்டுகள்!

பான், அக். 19—
ஜெர்மன் டவுன், ஹாம்பர்க் நகரில், விமான குண்டுகளால் ஏற்பட்ட இடிபாடுகளை அப்புறப்படுத்த எட்டரை ஆண்டுகள் பிடித்துள்ளன; 150 லட்சம் பவுன் செலவாகியுள்ளது. சேதாரங்களை எடுத்துச் செல்ல ஒரு தனி ரயில் தொடர் போடப்பட்டது.

'அனுமதிக்க வேண்டாம்'

சென்னை, அக். 19—
நந்திகொண்டா திட்டத்தை அனுமதிக்க வேண்டாம் என்றும் அது அமுல் செய்யப்பட்டால், புத்த சின்னங்கள் கொண்ட பிரபல இடமான நாகார்ஜுனகொண்டா மூழ்கி விடுமென்றும், பண்டித நேருவிற்கும், ஆந்திரப் பிரதமர் டி. பிரகாசத்திற்கும் மகாபோதி சங்கத்தின் சென்னை கிளை தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியுள்ளதாம்.

திண்டாட்டம் இல்லை

பம்பாய், அக். 20—
தொழிலாளர்களுக்கு வீடு வசதிகள் செய்து தருவதற்காக பர்மிய சர்க்கார், இவ்வாண்டில், ரூ. 60,000,000 ஒதுக்கியுள்ளனர். என்று பர்மிய மந்திரி ரஷித் கூறினார். ஏராளமான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டிருப்பதினால், பர்மாவில் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை என்று அவர் கூறினார்.

ஆபத்தானதாம்!

சென்னை, அக். 20—
"இப்போதுள்ள நிலைமையில், மொழிவாரி மாநிலங்களை அமைப்பது மிகவும் ஆபத்தாகும்; தனிப்பட்ட மாநிலப் பித்து ஏற்படுவதால், பிரிவினை மனப்பான்மை ஏற்பட்டு, இந்தியாவின் ஐக்கியம் குலைய வழி ஏற்பட்டுவிடும்," என்று, தோழர் கே. காமராஜ் கூறியுள்ளார்.

அதிகரிப்பு

பம்பாய், அக். 20—
பிரஜா—சோஷியலிஸ்ட் கட்சியில் மெம்பர்களின் தொகை 2,70,000-க்கு மேல் அதிகரித்து விட்டதென்று கட்சியின் மத்திய காரியாலயம் அறிவிக்கிறது. பிரஜா கட்சியுடன் சேருமுன், சோஷலிஸ்ட் கட்சியின் எண்ணிக்கை 1,72,000 ஆகும்.

தி. மு. கழக செயற் குழுக் கூட்டங்கள்

★

நெல்லை

11—10—53-ல், திருவள்ளுவர் கழக மேடையில் நகர தி. மு. கழக செயற்குழு உறுப்பினர் கூட்டம், தோழர் நாராயணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது. பல முக்கிய விஷயங்கள் பற்றி முடிவு செய்யப்பட்டது.

தில்லை

11—10—53-ல், நடைபெற்ற தி. மு கழகச் செயற்குழு கூட்டத்தில், 22—10—53-ல், சிதம்பரத்திற்கு வர இருக்கும் கவர்னர் பிரகாசாவிற்கு கருப்புக் கொடி காட்டி, நமது அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்வது எனவும். கருப்புக் கொடி காட்டும் நிகழ்ச்சியில் சிதம்பரம் வட்டக் கிளைக் கழகங்களைப் பங்கெடுத்துக் கொள்ளுமாறு இக்கமிட்டி கேட்டுக் கொள்கிறது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அன்னதானப்பட்டி

11—10—53-ல், சேலம், அன்னதானப்பட்டி தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் தோழர் சி. பழனியப்பன் தலைமையில் கூடியது. அது சமயம் தோழர் என். ஆர். தாஸ், செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர், இக்கிளைக் கழகத்தின் சார்பில் "புதுமை நூலகம்" ஒன்று நிறுவப்பட்டு, அது நன்கு நடைபெறுவதைக் குறித்து பலர் பாராட்டிப் பேசினர்.

திருச்செந்தூர்

திருச்செந்தூர், அக். 15—
11—10—53-ல், தி. மு. கழகக் கிளையின் செயற்குழு கூட்டம் தோழர் கே. எஸ். கேசவன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் இரா. மயிலைநாதன் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், நாத்துக்குடி வழக்கு நிதிக்கு, தோழர் கணபதி தலைமையில் குழு ஒன்று நிறுவப்பட்டது; பண்டித நேருவின் பேச்சை வன்மையாகக் கண்டித்தது.

கல்லக்குடி அறப்போர்

★

இன்று

101-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்

★

இன்று

100-வது நாள்

அறந்தை

ரயில் நிறுத்தக் கிளர்ச்சியில் 2 மாத சிறை தண்டனை அடைந்து, 9—10—53-ல் விடுதலை பெற்ற அறந்தை தி. மு. கழகத தோழர்களான ஒலிபன்கர்ணு, மு. சீனுவாசன், உ. சி. உடையப்பன் ஆகிய மூவரும், 12—10—53-ல், ரயில் நிலையத்தில் பெருமகிழ்வுடன் வரவேற்கப்பட்டு, ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு உபசரிக்கப்பட்டனர்.

பாண்டுப் (பம்பாய்)

7—10—53-ல், செயலாளர் தலைமையின் கீழ் தி. மு கழகச் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அதுபோது, ஆச்சாரியாரின் பொறுப்பற்ற பேச்சுக்களைக் கண்டித்தும், நாத்துக்குடித் தோழர்களை உடனடியாக விடுதலை செய்யக் கோரியும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சூரப்பள்ளி

17—10—53-ல், தி. மு கழக செயற்குழுக் கூட்டம், தோழர் கு. சி. கந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது, சூரப்பள்ளி கிராமம், கம்பா சூரப்பள்ளியில் படிக்க வயது வந்த பிள்ளைகள் சுமார் 500 பேர் இருக்குமாதலால், ஒரு ஆரம்பப் பாடசாலை அமைத்து, கல்வி கற்க வசதி செய்து தருமாறு சேலம் ஜில்லா போர்டைக் கேட்டுக்கொண்டும், இயக்கப் பத்திரிகைகளை, கழகத்திற்கு இலவசமாக அளித்து வரும் தோழர்கட்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டதுடன், மற்றும் பல முக்கியத் தீர்மானங்கள் நிறைவேறியது.

மேலக்கற்கண்டார்கோட்டை

18—10—53-ல், கழக இல்லத்தில், கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, திரு. வி. க. மறைவுக்கும், கழக உறுப்பினர்களான தோழர்கள் லட்சுமிநாராயணன், ராமு ஆகியவர்களின் தந்தையர்களின் மறைவுக்கும் அனுதாபம் தெரிவிக்கப்பட்டதுடன், கல்லக்குடி அறப்போரில் சிறைசென்று மீண்ட காரைக்குடி தோழர் இராம-சுப்பையா குழுவினரைப் பாராட்டியும், 24—10—53-ல், நடைபெறவிருந்த கழக 3-வது ஆண்டு விழாவை, மழையின் காரணமாக நடத்த முடியாதென்று கருதி, 14-11-53-ல், நடத்துவதென தீர்மானிக்கப்பட்டும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சென்னை (37வது வட்டம்)

18—10—53-ல், தோழர் கோ. இளவரசு தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அதுபோது, திரு. வி. க. மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், மாத வரவு—செலவு கணக்கைப் பரிசீலனை செய்து ஏற்றுக்கொண்டும், கழகத்தின் மூன்றாவது ஆண்டு விழாவை நவம்பர் 8-ம் தேதி நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இடைப்பாடி

18—10—53-ல், தோழர் பாபண்டரிநாதன் தலைமையில் தி. மு. கழக நிர்வாகக்குழு கூட்டம் நடைபெற்றது. அதுசமயம். சென்னை சர்க்கார், ஆந்திர மாநிலப் பிரிவினையின் காரணமாக, ஊழியர்கள் பலரை நீக்கியதைக் கண்டித்தும், தோழர் ஆர். வி. பெருமாள் அவர்களை மீண்டும் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

அதங்குடி

தி. மு. கழக செயற்குழு அவசரக் கூட்டம் 16—10—53-ல், தோழர் செல்வமணி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் கே. பாலசுப்ரமணியம் செயலாளராகவும், ஆர். செல்வமணி பொருளாளராகவும், எ. ஆர். பி. மகாலிங்கம் துணைச் செயலாளராகவும், தி அ. ஞானசுந்தரம் மாவட்டப் பிரதிநிதியாகவும், அமிர்தலிங்கம் விளம்பர உறுப்பினராகவும், கே. சபாபதி, தம்பிராசு, தங்கராசு, ரத்தினவேல், என். நெடுஞ்சேரன், கே. தட்சணாமூர்த்தி, சாமிநாதன் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டது.

திருப்பூர்

14—10—53ல், திருப்பூர் தி. மு. கழக செயற்குழு கூட்டத்தில், இந்நகர் 13, 14-வது வார்டு தி. மு. கழகக் கிளையை அங்கீகாரம் செய்தும், தோழர்கள் கே. தங்கமுத்து, கே. எஸ். மணியம் ஆகியவர்களை நகரக் கழகத்திற்கு செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

ஆலந்தூர்

8—10—53 ல், தி. மு. கழகச் செயற்குழு கூட்டம், தோழர் இரா. கோதண்டராமன் தலைமையில் கூடி, 30—9—53-ல், நடந்த பொது உறுப்பினர் கூட்டத் தீர்மானங்களையும், முடிவுகளையும் அங்கீகரித்தும், நேருவின் நாவடக்கமற்ற பேச்சைக் கண்டித்தும், காங்கிரஸ் கூலிகளின் காலித்தனத்தைக் கண்டித்தும், அவர்களின் வெறிச் செயலுக்கு இலக்கான தோழர்களுக்கு ஆறுதல் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

30—9—53-ல், நடந்த பொது உறுப்பினர் கூட்டத்தில், தோழர்கள் மு இராசாபாதர், வே. ரா. கிருஷ்ணன் ஆகியோரை செயற்குழுவிற்கும், தோழர்கள் ப. திருநாவுக்கரசை மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

சென்னிமலை

17—10—53-ல், தோழர் எ. முருகேசன் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் பொதுக்கூட்டத்தில், இவ்வாண்டுக்கு செயற்குழு உறுப்பினர்களாக தோழர்கள் எ. முருகேசன் செயலாளராகவும், எ. ராசலிங்கம் துணைச் செயலாளராகவும், பி. சீதாராமன் பொருளாளராகவும், கே. எஸ். திருமலைசாமி மாவட்டப் பிரதிநிதியாகவும், உறுப்பினர்களாக எ. கௌந்தசாமி, ஆர். சிவன்மலை, சி. எஸ். அலாவுதீன், ச. சின்னுசாமி, கே. அய்யாவு, என். நடராசன். கே. ராவணன், எஸ். மாபு, பி. பாலசுப்ரமணியம், கே. நாச்சிமுத்து, பி எஸ். சோமசுந்திரம், கெ. பழனிசாமி, எ. எஸ். சாமி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பெரியகுளம்

12—10—53-ல், தி மு. கழக செயற்குழு கூட்டம், தோழர் கோ. முனியாண்டி தலைமையில் கூடியது. அதுபோது, பல தீர்மானங்கள் நிறைவேறின.

திருவாரூர்

11—10—53-ல் கூடிய செயற்குழுக் கூட்டத்தில், ரயில் நிறுத்தப் போராட்டத்தில், நாகை வட்டாரத்திலிருந்து கலந்துகொண்டு சிறை சென்ற தோழர்களுக்கு நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

கலையம்புத்தூர்

தி. மு. கழக செயற்குழு கூட்டம் 4—10—53-ல் நடைபெற்றது. அதுசமயம், சென்னை செனகார் பேட்டையை 'திரு. வி. க. நகர்' என மாற்ற வேண்டும் என்று அரசியலாரைக் கேட்டுக்கொண்டும், நாத்துக்குடி, கல்லக்குடி வழக்குகளை வாபஸ் வாங்குவதோடு, தி. மு. கழகத் தோழர்களை விடுதலை செய்யக் கோரியும், அமைதியாக நேருவுக்குக் கருப்புக்கொடி காட்டிய நமது தோழர்களை "அகிம்சா" மூர்த்திகள் அக்கிரமமாகத் தாக்கியதை வன்மையாகக் கண்டித்தும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருவாங்கூர்-கொச்சி தேர்தலில், காங்கிரசுக்கு எதிராகப் போட்டியிட, எதிர்க் கட்சிகளான சோஷலிஸ்ட் கட்சி, புரட்சிகர சோஷலிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவைகள் ஐக்கிய முன்னணி அமைத்துள்ளன.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், தமிழ்நிலா அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, ஆதியப்ப நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.